Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.124/2018
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3,Page.No.42/21

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காதிர் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சையத் | தொழில் | கவரிங் வியபாரம் |
| கிராமம் | | மதம் | முஸ்லீம் |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 2nd day of November 2021.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முன் விசாரணை.-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கவரிங் வியபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை சம்வத்தின் அன்று தான் பார்த்துள்ளேன். சுமார் 4வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை சாயங்காலம் எனது அண்ணன் மகன் அ.சா.1 சித்திக்கை 1ம் எதிரி அருண்குமார் செங்கலை வைத்து முகத்தில் அடித்தார். அதில் அ.சா.1 சித்திக்கு பற்கள் உடைந்து வாயில் இரத்தம் வந்ததது பின்பு அ.சா.1 சித்திக் இருந்த நிலையை பார்த்து எனக்கு மயக்கம் வந்தது. பின்பு சுதாரித்துக்கொண்டு அ.சா.1 சித்திக்கை திருப்பத்தூர் அரசு மருத்துவமணைக்கு அழைத்து சென்றேன். பின்பு மேல்சிகிச்சைக்காக பெங்களுர் அழைத்து சென்றேன். என்னிடம் காட்டப்படும் வழக்கு சொத்து அ.சா.பொ.1 ஆல் தான் அ.சா.1 தாக்கப்பட்டார். தான் போலீசார் என்னை விசாரித்தார்கள் சம்பவ இடத்தையும பார்த்து சென்றார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.- இல்லை.**

நான் 15 வருடமாக வியபாரம் செய்து வருகிறேன். இப்போதும் நான் வியபாரம் செய்து வருகிறேன். திருவிழா நடைபெறும் இடங்களுக்கு தள்ளுவண்டியில் வியபாரம் செய்வேன். திருவிழா இல்லாத சமயங்களில் தெரு பக்கங்களில் செல்வேன். சம்பவம் நடந்த அன்று அண்ணாநகர் பகுதிக்கு கவரிங் நகைகளை விற்க சென்றிருந்தேன். சம்பவம் நடந்த அன்று நான் சம்பவத்தால் சாப்பிட வில்லை. அண்ணா நகரும் கலைஞர் நகரும் பக்கம் பக்கம் என்றால்

சரிதான். அ.சா.1 சித்திக் அடிப்படும் போது கூட்டமாக ஆட்கள் இருந்தார்கள். அந்த கூட்டத்தில் நான் என்ன நடந்தது என்று கேட்டேன் என்றால் சரிதான். அ.சா.1யை மருத்துவமனைக்கு எனது அண்ணன் கூட்டி சென்றார். போலீசார் விசாரயைில் இதைதான் கூறினேன். போலீசார் என்னை சம்பவயிடத்திலும் மருத்துவமனையிலும் விசாரித்தார்கள். அ.சா1 சித்திக் எனது உடன் பிறந்த அண்ணன் மகன் ஆவார். அண்ணாநகரில் வியபாரம் செய்யும் போது சுமார் 2 மணி இருக்கும். நான் வண்டியை தள்ளி சென்று கொண்டிருந்தபோது எனது அண்ணன் மகனை அடித்து இரத்தம் வந்ததாக பல் விழுந்து விட்டதாக யாரோ சொன்னார்கள். நான் வரும் வழியில் தான் சம்பவம் பற்றி சொன்னார்கள். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை 1ம் எதிரியின் கையில் செங்கல் இருந்தது. சம்பவம் நடந்த இடம் போக்குவரத்தது மிகுதியான இடம் என்றால் சரிதான். சாலை முழுவதும் தார்சாலை என்றால் சரிதான். தார் சாலை ஒட்டியுள்ள மண் சாலையில் தான் மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். போக்குவரத்து மிகுதியான இடம் என்பதால் அங்கு சண்டை நடப்பதற்கு சாத்தியம் இல்லை என்றால் சரியல்ல நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவயிடதிற்கு செல்லாமல் அ.சா.1 எனது அண்ணன் மகன் என்பதால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வழக்கு சொத்து அ.சா.பொ கிடைக்க வாய்பில்லை என்றால் சரியல்ல.

Signature of Witness.